# இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மரபில் கோவைப் பிரபந்தம்
## (அப்துல் மஜீது புலவரின் ஆசாரக்கோவை மீதான பார்வை)

**Mr. F. Suman**
Department of Tamil, University of Peradeniya, Sri Lanka.
(paskaran.suman@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழில் எழுந்துள்ள சிற்றிலக்கிய வடிவங்களுள் கோவை இலக்கியமும் ஒன்று. தமிழ் இலக்கண நூல்கள் கூறும் இலக்கண வரம்பிற்கு உட்பட்டு எழுந்த கோவை இலக்கியங்கள் பலவுண்டு. ஆயினும், அறக்கருத்துக்களை கோவைப்படுத்தி - நிரல்படுத்திக் கூறுதல் என்ற நிலையிலும் சங்கமருவிய காலத்தில் ஆசாரக் கோவை எனும் இலக்கியம் தோன்றியுள்ளமை நோக்கத்தக்கது. இங்கு கோவை என்பது காரணப் பெயராக அமைகிறது. அகப்பொருள் இலக்கணத் துறைகளை நிரல்பட கோவைப்படுத்துவதாகவும் ஆசாரங்களைக் கோவைப்படுத்துவதாகவும் இது அமைகிறது. எவ்வறாயினும், தமிழ் மரபில் கோவை எனும் பெயரில் இரு தளங்களில் சிற்றிலக்கிய வடிவம் நிலைபெற்றுள்ளது எனலாம். தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்த இஸ்லாம், தமிழ் இலக்கிய மரபுகளைப் பின்பற்றி இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்தது. ஆற்றுப்படை தொட்டு புராணம் வரையான பெரும்பாலான இலக்கிய வடிவங்களை உள்வாங்கி அது தமது இலக்கிய வெளிப்பாடுகளை முன்வைக்கலாயிற்று. அத்தோடு தமக்கே உரித்தான இலக்கிய வடிவங்களினூடும் இலக்கியச் செயற்பாடுகளை மேற்கொண்டன. இம்முனைப்புக்களில் ஒன்றாகவே தமிழ் மரபில் இரு தளங்களில் நிலைபெற்றிருந்த கோவை இலக்கிய மரபினை உள்வாங்கியமையினையும் அணுக வேண்டும். அவ்வகையில் இக்கட்டுரையானது கோவை இலக்கிய வடிவத்தின் இலக்கிய வரம்புகளை எடுத்துக்காட்டி, அம்மரபில் நின்று தோன்றிய கோவைப் பிரபந்தங்களை அடையாளப்படுத்துவதாகவும் ஆசாரங்களைக் கோவைப்படுத்தல் என்ற தளத்தைப் பின்பற்றி அப்துல்மஜீத் புலவரால் இயற்றப்பட்ட ஆசாரக்கோவை தொடர்பிலான பரந்த பார்வையை முன்வைப்பதாகவும் அமைகிறது.*

*ஆசாரங்களைக் கோவைப்படுத்தல் என்ற நிலையில் இஸ்லாமிய மரபில் மூன்று கோவைகள் தோன்றியுள்ளன. அதில் ஆசாரக்கோவை எடுத்தியம்பும் ஆசாரங்கள் யாரை முன்னிலைப்படுத்துகின்றன, அது எடுத்தியம்பும் ஆசாரம் முஸ்லிம் சமூகத்தினருக்கு மாத்திரமே பொருந்தக்கூடியனவா என்பன குறித்து ஆராய்தலே இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வானது, பகுப்பாய்வு அணுகுமுறை, ஒப்பியல் அணுகுமுறை, விபரண அணுகுமுறை, வரலாற்று அணுகுமுறை ஆகிய ஆய்வு அணுகுமுறைகளைக் கைக்கொள்கிறது. இவ்வானது மு.க.அ. அப்துல் மஜீத் புலவர் இயற்றிய ஆசாரக்கோவையும் (1902), சங்கமருவிய காலத்தில் தோன்றிய ஆசாரக் கோவையும் (பெருவாயின் முள்ளியார் இயற்றியது) ஆய்வின் முதன்மை ஆதாரங்களாகக் கொள்கிறது.*

*மேற்குறித்த நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின்வழி பல்வேறு முடிவுகள் எட்டப்பட்டன. அவையாவன : இந்நூலில் சகல மக்களாலும் பின்பற்றக்கூடிய பொதுவான அறங்களே பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதேவேளை முஸ்லிம் சமூகத்தினருக்கே தனித்துமான பல அறங்களும் பல்வேறு இடங்களில் சுட்டப்பட்டுள்ளன. ஆலிமுக்கான அறங்கள் இந்நூலினுள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு அந்நூல் எழுந்த காலச் சூழலே அடிப்படையாய் அமைந்துள்ளது, உடல்சார் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான அறங்கள் பல கட்டமைக்கப்பட்டுள்ளன. இது சங்கமருவிய கால அறநூல்களின் தாக்கத்தினால் ஏற்பட்டவை, இஸ்லாமிய மார்க்கக் கடமைகளை அறங்களாக வலியுறுத்துகின்றன.*

**அறிமுகம்**

தமிழ் இலக்கிய மரபில் கோவை எனும் சிற்றிலக்கிய வடிவமானது, இலக்கண நூல்கள் கோவை இலக்கிய வடிவத்துக்குக் கூறும் இலக்கண வரையறைகளைப் பின்பற்றி எழுதல் எனும் தளத்திலும் ஆசாரங்களைக் கோவைப்படுத்தி - நிரல்படுத்திக் கூறுதல் எனும் தளத்திலும் என இரு தளங்களில் நிலைபெற்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றை அணுகும்போதும் இந்நிலைப்பாட்டை அவதானிக்கலாம்.

தமிழ் நாட்டிற்குள் வந்து சேர்ந்த இஸ்லாம் தமிழின் செவ்வியல் இலக்கிய மரபுகளையும்

நாட்டார் இலக்கிய மரபுகளையும் பின்பற்றித் தனது இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்தது. (தமக்கே உரித்தான முனாஜாத்து, கிஸ்ஸா போன்ற இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்திக் கொண்டது). இம்முனைப்புக்களில் ஒன்றாகவே தமிழ் மரபில் இருதளங்களில் நிலைபெற்றிருந்த கோவை இலக்கிய மரபினை உள்வாங்கியமையினையும் நாம் அணுக வேண்டும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றை அணுகும்போது மேற்சொன்ன இரு தளங்களில் தோன்றிய பல கோவை இலக்கியங்களை அறியமுடிகிறது. எனவேதான் இக்கட்டுரையானது கோவைப் பிரபந்தத்தின் இலக்கண வரம்புகளை எடுத்துக்காட்டி, அம்மரபு நின்று தோன்றிய இஸ்லாமியக் கோவைப் பிரபந்தங்களை அடையாளப்படுத்துவாகவும் ஆசாரங்களைக் கோவைப்படுத்தல் என்ற அடிப்படையைப் பின்பற்றி அப்துல் மஜீத் புலவர் இயற்றிய ஆசாரக்கோவை தொடர்பிலான பரந்த பார்வையை முன்வைப்பாகவும் அமைகிறது.

கோவை இலக்கியமானது அகப்பொருள் துறைகளை நிரல்பட அமைத்துப் பாடப்படுகின்ற ஒரு சிற்றிலக்கிய வடிவமாகும் எனத் தமிழ் இலக்கண நூல்கள் சுட்டுகின்றன. “அகப்பொருள் இலக்கணத்துக்குரிய துறைகள் நானூறு என்று வகுக்கப்பெற்று அந்நானூறு துறைகளுக்கும் ஒவ்வொரு உதாரண இலக்கியமாக ஒவ்வொரு பாடல் இயற்றப்பெற்று முறையாக அமையப்பெற்றதே கோவை இலக்கியமாகும்.

அகப்பொருள் இலக்கணம் கூறும் இறையனார் அகப்பொருள், தொல்காப்பியம், வீரசோழியம், நம்பியகப்பொருள் ஆகியவற்றுள் கோவை இலக்கியத்திற்குரிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியம், வீரசோழியம் ஆகியவற்றுள் சிற்சில இடங்களிலும் இறையனாரகப் பொருள், நம்பியகப் பொருள் ஆகியவற்றுள் முழுமையாகவும் கோவையின் இலக்கணத்தைக் காணலாம். கோவை ஒரு சிற்றிலக்கியம் என்ற முறையில் கோவையின் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்களும் கூறுகின்றன. பன்னிரு பாட்டியல், சிதம்பர பாட்டியல், வெண்பா பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்த தீபிகை முதலான பாட்டியல் நூல்களிலும் கோவை இலக்கியத்திற்குரிய இலக்கணம் உரைக்கப்பட்டுள்ளது” (செயராமன், வீ. : 1967 : பக். 61 - 63).

பன்னிரு பாட்டியலானது அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவி ஐந்திணையில் திரியாததாய் பொருந்திய களவு, கற்பு, கற்பினுக்குரிய கிளவிகளை உடையதாய் கட்டளைக் கலித்துறை யாப்பில் நானூறு பாடல்களால் செய்யப்படுவது கோவை எனக் கீழ்வரும் செய்யுளினூடு குறிப்பிடுகின்றது :

கோவை என்பது கூறுங்காலை
மேவிய களவு கற்பெனும் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப
(பன்னிரு பாட்டியல் : 221)

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றை அணுகுகின்றபோது மேற்சொன்ன விதிமுறைகளைப் பின்பற்றி எழுந்த நான்கு கோவை இலக்கியங்களை அடையாளம் காண முடிகின்றது. அவையாவன :

1. மக்காக் கோவை
2. விஜயன் அப்துல் ரகிமான் அகப்பொருள் பலதுறைக் கோவை
3. ஷம்சுத்தாசீன் கோவை
4. முகைத்தீன் கோவை

ஏலவே குறிப்பிட்டது போன்றுதமிழ் இலக்கண நூல்கள் குறிப்பிடும் கோவைப் பிரபந்த இலக்கண வரம்புக்கு அப்பாற்பட்டு பல்வேறு கருத்துக்களைக் கோவைப்படுத்திக் கூறுதல் என்ற அடிப்படையில் சில கோவை நூல்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தோன்றியுள்ளன. அத்தகைய ஐந்து கோவை நூல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவையாவன :

1. மும்மணிக் கோவை
2. பதானந்தக் கோவை
3. கொள்கை மணிக் கோவை
4. முஹம்மது காசிம் பொன் மொழிக் கோவை
5. ஆசாரக்கோவை

இவற்றுள் முதலிரு கோவைகளும் ஆசாரங்களைக் கோவைப்படுத்துவதிலிருந்து மாறுபட்டு, நாயகம் பெருமனார் (சல்) அவர்களின் பெருமைகளை தொகுத்துத் தருவதாக அமைந்துள்ளன. ஆசாரங்களைத் தொகுத்துக் கூறுதல் என்ற அடிப்படையில் கொள்கை மணிக் கோவை, முகம்மது காசிம் பொன்மொழிக் கோவை, ஆசாரக் கோவை ஆகியன எழுந்துள்ளன. மேற்குறித்த கோவைகளில் ஆசாரக்கோவை குறித்த விரிவான பார்வை இங்கு முன்வைக்கப்படுகின்றது.

இவ் ஆசாரக் கோவையானது 1902 ஆம் ஆண்டு வெளிவந்தது. நூலின் முகப்பில் ‘கீழக்கரை முகம்மது அப்துல்கரீம் மரைக்காயர் குமாரர் இயற்றமிழ் வித்துவான் மு.அ.க. அப்துல் மஜீது அவர்கள் இயற்றியது’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ‘இ:.து கல்பிட்டி மகா- ரா — ரா - ஸ்ரீ உமறு கத்தாபு மரைக்காயர் குமாரர் ஸ்ரீமான் முகம்மது தம்பி மரைக்காயர் முயற்சியினால் சென்னை கலாரத் நகரம் அச்சுக் கூடத்தில் 1902 இல் பதிக்கப்பட்டது’ எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையையும் அரும்பத விளக்கத்தையும் ம.மு உவைஸ் வழங்கியுள்ளார்.

இந்நூலாசிரியர் இராமநாதபுரம் கீழக்கரையைச் சேர்ந்தவர். இவர் வள்ளல் சீதக்காதி மரைக்காயரின் வழித்தோன்றல் என

குறிப்பிடப்படுகின்றது. கீழக்கரையில் உள்ள பெரிய வித்தியாசாலையில் இவர் கல்வி கற்றார். அதன் தலைமை பண்டிதர் குத்துபுத்தீன் ஸாஹியிடம் அறபு தமிழ் மொழிகளைக் கற்றுத்தேர்ந்தார். இவருக்கு வர்த்தகத்தில் அதிக நாட்டம் இருந்ததால் வியாபாரத்தில் அதிகம் ஈடுபட்டதோடு இலங்கையோடும் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டதோடு இப்றாஹிம் புலவரோடு சேர்ந்து தனது இலக்கிய அறிவையும் வளர்த்தார் (அனஸ், எம்.எஸ்.எம் : 2002: பக்.67)

இந்நூலிலுள்ள நூறு செய்யுட்களின் இறுதியிலும் இந்நூலை இயற்றுவதற்குப் பொருளுதவி செய்த கற்பிட்டியைச் சேர்ந்த முகமது தம்பி மரைக்காயரின் நற்பண்புகளை ஆசிரியர் போற்றுகின்றார். இவை இந்நூல் குறித்த முற்குறிப்புச் செய்திகள்.

இனி, அப்துல் மஜீது புலவரின் ஆக்கத்திற்கும் சங்கமருவிய காலத்தில் பெருவாயின் முள்ளியார் இயற்றிய ஆசாரக்கோவைக்கும் இடையே ஏதேனும் இயைபுகள் உண்டா எனக் கண்டறிதல் அவசியமாகிறது. அவ்வழி நின்று சிந்திப்பின் முதலில் நூலின் தலைப்பு குறித்த கருத்தாடலே கவனம் பெறுகிறது. ஆசாரங்களைக் கோவைப்படுத்தித் தர முனைந்த அப்துல் மஜீது புலவர், பெருவாயின் முள்ளியாரைப் பின்பற்றியே தனது நூலுக்கும் ஆசாரக்கோவை எனப் பெயரிட்டுள்ளார் என்பது வெளிப்படை உண்மையாகிறது.

இரண்டாவது, உடல்சார் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான ஆசாரங்களை பெருவாயின் முள்ளியார் தனது நூலில் எடுத்தியம்பியமை அப்துல் மஜீது புலவர் தனது நூலில் அத்தகைய அம்சத்தை இணைத்துக் கொள்வதற்கு அடிப்படையாகியது என்று கூறுதலே பொருத்தமானது. ஆயினும், வெளிப்பாட்டு முறையில் இரு நூல்களுக்கும் இடையில் வேறுபாடு உண்டு (இது பற்றிப் பின்னர் விபரிக்கப்படும்).

மூன்றாவது, ஆசாரங்களைக் கோவைப்படுத்துதல் என்றவகையில் ஆசாரக்கோவைக்கான இலக்கண வரன்முறையை இலக்கண நூல்கள் எவையும் சுட்டவில்லை. ஆனாலும், ஆசாரங்களை நூறு செய்யுட்களின் வழி கோவைப்படுத்தியமை பெருவாயின் முள்ளியாரின் முதன் முயற்சி. இம்மரபைத் தானும் கைக்கொண்டு நூறு செய்யுட்களின் ஊடாக பல ஆசாரங்களை இவரும் நிரல்படுத்தியுள்ளார்.

இம்மூன்று தளங்களில் பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக்கோவையை அப்துல் மஜீது மனங்கொண்டு தனது நூலைக்கட்டமைத்துள்ளார்.

இந்நூலில் எடுத்தியம்பப்பட்டுள்ள ஆசாரங்கள் குறித்து வகுத்தும் தொகுத்தும் நோக்குவதற்கு முன்னர், அவை எடுத்தியம்பப்பட்ட விதம் இங்கு கவனம் பெறுகிறது. அவ்வகையில் பல்வேறு ஆசாரங்களைக் கோவைப்படுத்த முனைந்த அப்துல் மஜீது, பொதுவாக அற இலக்கியங்கள் அறத்தை எடுத்தியம்பக் கைக்கொண்ட வழிமுறைகளையே இவரும் கைக்கொண்டுள்ளார். இவற்றுள் குறிப்பிடத்தக்கது உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் கருத்துக்களை எடுத்துக்கூறியமையாகும் (அற இலக்கியங்கள் செய்யத்தகுந்தவை - செய்யத்தகாதவை, பின்பற்றக்கூடியவை - பின்பற்றத்தகாதவை, நன்மை - தீமை, நல்லோர் - தீயோர் என்ற பல அடிப்படைகளில் தமது கருத்துக்களை வலியுறுத்தின). இவர், மேற்படி வழிமுறையை நுட்பமாகப் பல இடங்களில் கையாண்டுள்ளார். அவற்றைக் கீழ்வருமாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும் :

**உடன்பாடு ஒ எதிர்மறை**

சிறப்பு x இழிவு (உதாரணம் : செய்யுள் : 23, 19)

புகழ்சி x இகழ்ச்சி (உதாரணம் : செய்யுள் : 16)

யோக்கியர் x அயோக்கியர் (உதாரணம் : செய்யுள் : 21, 22)

இறந்தும் இறவாதவர் x இறவாதிருந்தும் இறந்தவர் (உதாரணம்: செய்யுள் :37, 38)

நலம் x நலமின்மை (உதாரணம் : செய்யுள் : 65, 66)

நல்லவர் x தீயவர் (உதாரணம் : செய்யுள் : 13)

இவற்றிற்கு மேலாக இழிவிலும் இழிவை எடுத்துரைத்தல் என்ற அடிப்படையில் அறக்கருத்துக்களை எடுத்தியம்பியுள்ளமையையும் அவதானிக்க முடிகிறது. பாவியிற் பாவி, தீயரில் தீயர், தோசியிற் தோசி, வீணரில் வீணர், பேதையில் பேதை, பேயரில் பேயர் என்ற அடிப்படையில் அவை விளக்கப்பட்டுள்ளன. வகைமாதிரிக்காக சில செய்யுள் வரிகள் வருமாறு:

வந்தடைக்கலம் வைத்தவர் சொத்தினை
வௌவும் பாவியும் பாவியிற் பாவி காண்
(செய்யுள் : 28)

சொந்த மங்கைர் கஷ்டமடைந்திடச்
சோர மங்கையர்க் கீந்திடும் தீயரும்
பெந்திலுள்ளவர் கஷ்டமறிந்துமே
பெருமைக் காய்ப்பிறர்க் கீந்திடும் தீயரும்
வந்த நல்விருந் தாளிப சிக்கவே
வைத்துண் டீயருந் தீயரிற் றீயரே
(செய்யுள் : 29)

இனி, இந்நூல் எடுத்தியம்பும் அறங்களை வகுத்தும் தொகுத்தும் நோக்கலாம். இந்நூலில் கோவைப்படுத்தப்பட்டுள்ள அறங்கள் குறித்த பார்வையை எளிதாக்க அதனைக் கீழ்வரும் வகைப்பாட்டுக்குள் அடக்கலாம் :

→ கல்வி குறித்த ஆசாரம்

→ பெண்களுக்கான ஆசாரம்

→ இல்லானுக்கான ஆசாரம்

→ நாளாந்த கருமங்கள் மீதான ஆசாரம்

→ இஸ்லாமிய மார்க்கம் சார் கடமைகளை வலியுறுத்தல்

**கல்வி குறித்த ஆசாரம்**

கற்றறிந்தவரை நாடிக் கற்றல் - கற்றறிந்தவற்றை கற்றறியாருக்கு உரைத்தல் - கற்றறிந்தது போல் நடத்தல் (06) என்பவற்றை கல்வி குறித்த அறமாக ஒரு நூற்பாவால் உடன்பாடாக வலியுறுத்துகிறார். இவ்வாறு வலியுறுத்திய நூலாசிரியர், கற்றறிந்தவர்கள் கற்றறியார்க்குக் கற்பியாமல் இருத்தல் குற்றம் - கற்றறியாதோர் கற்றறிந்தவரிடம் சென்று கல்லாதிருப்பது குற்றம் - கற்றறிந்தவர் கற்றதிற்கேற்ப நடந்து கொள்ளாதிருப்பதும் குற்றம் என மேற்சொன்ன கருத்தையே எதிர்வினையாற்றலாக மற்றுமொரு நூற்பாவால் (07) கூறுகிறார். இவ்வாறு கற்பித்தல் - கற்றல் - கற்றபடி நடத்தல் எனத் தமிழிலக்கிய வரலாற்றில் தோன்றிய பல்வேறு அற நூல்களும் வலியுருத்திய கருத்தையே இவரும் வலியுருத்தியுள்ளார். மேலும்,கல்விச் செல்வத்தின் பெருமையை 'கல்வியே தினமும் எம்மைக் காக்கும் செல்வம்' என்றும் 'ஏனை செல்வத்துள் சிறந்த செல்வம் கல்வியே' (08) எனவும் குறிப்பிடுவதனூடு வலியுறுத்துகிறார்.

இவ்வாறு பொதுநிலையில் கற்றல் - கற்பித்தல் குறித்துப் பேசும் ஆசிரியர், சில நூற்பாக்களில் இஸ்லாமிய மார்க்கம்சார் கல்வியைப் புகட்டும் ஆலிம்களுக்கான ஆசாரங்களையும் 'தாம் கற்ற கல்விக்குத் தக்கபடி, மார்க்கச் சட்டத்திற்கேற்றபடி நடத்தல் வேண்டும்' என்றவாறு வலியுறுத்துகின்றமையும் நோக்கத்தக்கது.

**பெண்களுக்கான ஆசாரம்**

அப்துல் மஜீது இந்நூலில் இல்லாள், வரைவின் மகளிர் பற்றி ஆங்காங்கே குறிப்பிடுகிறார். இல்லாளுக்கான இயல்பாக கணவனுக்குக் கட்டுப்படுதலை ஆசிரியர் வலியுறுத்துகிறார். இதனைப் 'புருஷர் வார்த்தையை தட்டி நடந்திடும் பூவைமார்கள் இருந்திடும் வீட்டிலும் வல்லவன் முனி வானதி இறங்குமே' (35) எனக் குறிப்பிடுவதனூடு அறியலாம். பொதுவாக அற நூல்கள் பலவும் ஆணுக்குக் கட்டுப்பட்டவளாக பெண் இருப்பதையே நல்லொழுக்கமாகக் காட்டுகின்றன. திருவள்ளுவரும் 'பெண்வழிச்சேறல்' எனும் அதிகாரத்தினூடு மனைவி சொற்படி நடப்பவன் நற்பெயர் அடையமாட்டான் எனக் குறிப்பிடுவதும் பெண், ஆணுக்குக் கட்டுப்பட்டவளாக இயங்க வேண்டும் என்று கருதியமையினாலேயே ஆகும்.

இவ்வாறே கீழ்வரும் நூற்பாவால் இல்லாளுக்கான நற்பண்புகளையும், அத்தகைய நற்பண்புகள் இல்லாதவளால் ஏற்படும் கேடுகளையும் கூறி பெண்களுக்கான ஆசாரங்களை முன்நிறுத்துகிறார்:

கதித்த புத்திக ளுள்ளம டந்தையர்
காட்டையும் பெரும் வீடெனச் செய்குவர்
விதித்த பேதமை யுள்ளம டந்தையர்
வீட்டையும் பெருங் காடெனச் செய்குவர்
மிதித்த துற்குண முள்ள மடந்தையர்
மேற்குலத்தையுங் கீழ்க்குல மாக்குவர்

ஒழுக்கத்தில் வரையறை இல்லாத 'வரைவின் மகளிரை' கண்டனத்துக்குள்ளாக்குகின்றார். 'சுட்டு மக்கெடு வாருடன் கூடியே / சுகிக்குந் தோசியும் தோசியிற்றோசிகாண்' (30) எனவும், முனிவரும் வீடுகள் எவையெவைனெச் சுட்டும்போது 'வியவி சாராமி யற்றிடும் வீட்டிலும் / வல்லவன்முனி வானதி றங்குமே' (35) எனவும் சுட்டுவதனூடாவும் பரத்தையர் ஒழுக்கத்தைக் கண்டனம் செய்கின்றார்.

**இல்லானுக்கான ஆசாரம்**

பொதுவாக அறநூல்கள் வரைவின் மகளிர் ஒழுக்கத்தையும் பிறர்மனை நயக்கும் ஆண்களின் ஒழுக்கத்தையும் ஒருசேரவே கண்டிக்கின்றன. இப்போக்கிலிருந்து அப்துல் மஜீத் புலவரும் விடுபடவில்லை. இவர் பிறர்மனை நயத்தலால் ஏற்படும் கேட்டையும், இழிவையும் சுட்டுகிறார். பிறர்மனை நயத்தலால் தவம், தகைமை, கீர்த்தி, நேயம் என்பன கெட்டுப் பாவம், பகைமை முதலியன வந்து சேரும் என்றுகூறி பிறர்மனை நயத்தலால் வரும் கேட்டைக் குறிப்பிடுகிறார்.

தவமுங் கெட்டிடுங் கீர்த்தியுங் கெட்டிடும்
தகைமை கெட்டிடு நேயமு கெட்டிடும்
பவமும் வந்திடும் பங்கமும் வந்திடும்
பகைமை வந்திடு மச்சமும் வந்திடும்
பவள மெல்லித ழுந்நியர் பாரிமேற்
பாசங் கொண்டு விரும்பும் வர்க்கரோ

மேலும், சொந்த மங்கையர் கஷ்டமடைந்திடச் / சோர மங்கையர்க் கிந்திடும் தீயரும்' தீயரில் தீயர் என்கிறார். இவ்வாறாக பிறர்மனை நயத்தால் ஏற்படும் இழிவுநிலைகளையும் குறிப்பிட்டு பிறர்மனை நயத்தல் எனும் ஒழுக்கத்தைக் கண்டனம் செய்கின்றார்.

**நாளாந்த கருமங்கள் மீதான ஆசாரம்**

சங்கமருவிய காலத்தில் தோன்றிய ஆசாரக்கோவை உண்ணல், உடுத்தல், உறங்கல், குளித்தல் முதலான செயற்பாடுகள் மீது ஆசாரம் பேசுகிறது. இவ் ஆசாரங்கள் யாரை இலக்காகக் கொண்டு முன்மொழியப்பட்டன என்பது குறித்து தமிழ் இலக்கிய விமர்சன உலகில் பல கருத்தாடல்கள் நிகழ்ந்தேறியுள்ளன.

இதுவொருபுறமிருக்க அப்துல் மஜீது புலவரும் தனது ஆசாரக்கோவையில் உண்ணல், உடுத்தல், உறங்கல், விழித்தல் ஆகிய செயற்பாடுகளின்

மீது ஆசாரம் பேசுகிறார். இதற்கான பின்புலமே இங்கு அவதானத்திற்குரியது. பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக்கோவையை மனதிலிருத்தி தனது ஆசாரக்கோவையையும் கட்டமைத்துக் கொள்ள அப்துல் மஜீத் எண்ணியதன் விளைவே இதுவாகும் எனக் கூறுதல் பொருத்தமுடையது. ஆனால், இருவரும் மேற்காட்டிய ஆசாரங்களை எடுத்தியம்பிய விதம் வேறுபட்டு நிற்கின்றது. பெருவாயின் முள்ளியார் சைவச் சூழலோடு பொருந்திய வகையில் ஆசாரங்களை எடுத்தியம்ப, மஜீத் பொதுவான தளத்தில் நின்றே எடுத்தியம்புகிறார். வகைமாதிரிக்காக கீழே தரப்படும் உதாரணங்கள் இதனைத் தெளிவுபடுத்தும்:

காலையிற் றுயில் போக்கிவி ழித்தலும்
கட்டலின்றி மலஞ்சல நீக்கலும்
வாலை நீரினி னித்திய மூழ்கலும்
வந்த தேற்பநி யுண்டுகு டித்தலும்
மாலையிற்சில தூரமு லாவலும்
மறுவில் லாதசரீர சவுக்கியம்
(அ.ம. : 65)

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை
(பெ.மு. : 04)

இவற்றிற்கு மேலாக இஸ்லாம் மார்க்கம் சார்ந்த செயற்பாடுகளை நெறிதவறாது மேற்கொள்ளுமாறு தனது சமூகத்திற்கு வலியுறுத்தும் வகையிலும் பல கருத்துக்களைக்கோவைப்படுத்தியுள்ளார். அவ்வகையில் வெள்ளிக்கிழமையின் மகத்துவம், றமழான் மாதத்தின் மகத்துவம், தொழுகையின் மகத்துவம் என்பனவற்றை எடுத்துக்கூறி, சமூகத்தை மார்க்கம்சார்ந்தும் இயங்குவதற்கு வழிப்படுத்த முனைகிறார். கீழ்வரும் பாடலை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம் :

வாரமேழினு மிக்கவி சே'மாம்
வண்மையாகிய சுக்கிர வாரமே
சேரமாதமீ ராறினு மிக்கவி
சேஷ மாம்றம லானெனும் மாதமே
ஆர நற்றவ மிக்கவி சே'மாம்
ஐந்து வேளைவணங்குவ ணக்கமே (62)

இதனூடாகப் பிறதொரு உண்மையும் புலனாகிறது தமிழ் இலக்கிய வரலாற்றில் தோன்றிய அறநூல்கள் பொதுவாக அறத்தையே வலியுறுத்த விளைகின்ற போதிலும், அவற்றின் மதச்சார்புநிலை என்பது தவிர்க்க முடியாததொன்றாக இருந்துவந்துள்ளது. பெரும்பாலான அற இலக்கியங்களுக்கு இது பொருந்தும். இந்நிலை நின்று நோக்குகின்ற போது அப்துல் மஜீதும் இதற்கு விதிவிலக்கல்லர் என்பது புலனாகிறது.

தொகுத்து நோக்குமிடத்து அப்துல் மஜீது தனது நூலைக் கட்டமைப்பதற்கான அருட்டுணர்வை பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக்கோவையில் இருந்தே பெற்றுள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அத்தோடு இஸ்லாம் மார்க்கம் சார்ந்து தனது சமூகம் இயங்க சிறப்பாக இயங்க வேண்டும் என்ற அவரது மதச் சார்புநிலையும் இந்நூலின் கட்டமைப்பைத் தீர்மானித்துள்ளன. எம்.எஸ்.எம்.அனஸ் அவர்கள் 'இப்புலவர் இலங்கையில் இருந்த காலத்தில் கொழும்பு, மன்னார், கல்பிட்டி, திகழி போன்ற பல இடங்களில் சீறா படித்து, பொருள் சொல்லுதல், மார்க்க உபந்நியாசம் செய்தல், மௌலூது மற்றும் களரிகளில் பதம் பாடுதல் போன்றவற்றில் ஈடுபட்டு இப்பகுதி மக்களுக்கு மார்க்க உணர்வையும் இலக்கிய உணர்வையும் ஏற்படுத்தி வந்தார்' (அனஸ், எம்.எஸ்.எம் : 2002: பக்.68) என நூலாசிரியர் குறித்துக் குறிப்பிடுவதனையும் நோக்கும்போது மேற்குறித்த கருத்து அழுத்தம் பெறுகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1) அப்துல் மஜீது, மு.க.அ. (1902) ஆசாரக்கோவை, சென்னை : கலாரத் நகரம்.

2) அனஸ், எம்.எஸ்.எம். (2002) புத்தளம் பிரதேச புலவர்கள், இலங்கை : உலக இஸ்லாமிய மாநாடுட்டு குழு.

3) உவைஸ், ம.மு., (1994) இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி மூன்று - சிற்றிலக்கியங்கள், மதுரை : மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.

4) செயராமன், ந.வீ. (1967) சிற்றிலக்கியச் செல்வங்கள், சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

5) பெருவாயின் முள்ளியார் (1939) ஆசாரக்கோவை, சென்னை: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

6) ராஜ் கௌதமன் (1997) அறம் / அதிகாரம், கோவை : விடியல் பதிப்பகம்.

7) சிதம்பரனார், சாமி. (1968) பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், சென்னை: இலக்கிய நிலையம்.

8) செய்யது அப்துல்லாஹ், எஸ்.ஏ. (1990) 'முஸ்லிம்களின் கோவைகள்', ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டு சிறப்பு மலர், கீழக்கரை.

9) மகேஸ்வரன், வ. (2011) 'ஆசாரக்கோவையும் அறமும்', அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும், கொழும்பு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

10) பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம். (1968) 'ஆசாரக்கோவை', இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் (தொ.ஆ. எஸ்.ஏ.செய்யிது ஹஸன் மௌலானா), கொழும்பு : அரசு வெளியீடு.